# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044364

1. District மாவட்டம் : Coimbatore PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 10/2022/AC/CB Date: நாள் 26.7.2022

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act 1988 as amended Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: by the Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: "
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 15.6.2022 Date to : நாள் வரை 26.7.2022
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.7.2022 Time : நேரம் 1100 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 26.7.2022 Time : நேரம் 1100 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் at about 60 km south
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி O/o Assistant Engineer Water Resources Organisation Aliyar Vadinila kollam, Pollachi
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Veangai Selva Prabhu (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் V. Sothimuthu
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 42 | 2022 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Transport Business (g) Address : முகவரி Door No: 1/166, Anna Street, Thippampatty (PO), Pollachi (TK) Coimbatore. 642107

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Senthilkumar, Assistant Engineer, Water Resources Organisation, Aliyar Vadinila kollam, pollachi.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — No delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 26/07/2022

Signature of the Officer in-charge, Police Station [signature] 26/7/2022
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
26-7-2022 at 1230hrs

Name: பெயர் C. LATHA
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண் .........
V & AC, COIMBATORE.

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2022/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

இன்று 26.07.2022 ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.லதா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலுகா, திப்பம்பட்டி அஞ்சல், அண்ணா தெரு, கதவு எண்.1/166 ல் வசிக்கும் செல்லமுத்து என்பவரது மகன் திரு.S.வேங்கை செல்வபிரபு, வயது-42 என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு – அனுப்புனர் S.வேங்கை செல்வபிரபு, வயது-42, த/பெ. V.செல்லமுத்து, கதவு எண்.1/166, அண்ணா தெரு, திப்பம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி தாலுகா, கோவை – 642107. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோவை. அய்யா, நான் தற்போது கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலுகா, திப்பம்பட்டியில் உள்ள அண்ணா தெரு கதவு எண்.1/166 ல் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு திருமணமாகி ஒரு மகன் உள்ளார். நான் சிவகணேஷ் என்ற பெயரில் லாரி டிரான்ஸ்போர்ட் பொள்ளாச்சியில் கடந்த 10 வருடமாக நடத்தி வருகிறேன். நான் கடந்த 2019 ஆம் ஆண்டு பொள்ளச்சி தாலுகா ஏரிப்பட்டி அஞ்சல் போலிகவுண்டன்பாளையம் கிராமத்தில் 2.52 ஏக்கர் நிலத்தை திரு.கனகராஜ் மற்றும் அவரது சகோதரரிடமிருந்து எனது அம்மா திருமதி.ராஜலட்சுமி அவர்களது பெயரில் வாங்கினேன். பின்னர் கடந்த 2020 ல் மேற்படி நிலத்தில் 1.52 ஏக்கரை எனது பெயருக்கு எனது அம்மா தானசெட்டில்மென்டாக கொடுத்தார்கள். மேற்படி எனது அம்மா பெயரில் உள்ள 1 ஏக்கர் (க.ச.எண்.45/A1A1) நிலத்தையும், எனது பெயரில் உள்ள 1.52 ஏக்கர் (க.ச.எண்.45/A1A2) நிலத்தையும், வீட்டு மனையாக பிரிப்பதற்கு கோவை மாவட்ட நகர் ஊரமைப்பு துறை (DTCP) அலுவலகத்தில் கடந்த 02.02.2022 ஆம் விண்ணப்பம் கொடுத்திருந்தேன். எனது மனு சம்மந்தமாக DTCP அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற கடித நகலின் மூலம் மேற்படி எனது இடத்திற்கு அருகில் PAP வாய்கால் செல்வதால் வேளாண்மைதுறை அனுமதி பெறும்பொருட்டு பொதுபணித்துறையின் தடையின்மை சான்றிதழ் கேட்டு நான் சமர்பித்த கோப்புகளை பொள்ளாச்சியில் உள்ள நீர்வள ஆதாரத்துறை

செயற்பொறியாளருக்கு அனுப்பபட்டதாக தெரிந்து கொண்டேன். நான் மேற்படி தடையில்லா சான்று சம்மந்தமாக கடந்த மே மாதத்தில் பொள்ளாச்சியில் உள்ள நீர்வள ஆதாரத்துறை செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்று அந்த அலுவலகத்தில் உள்ள தபால் பிரிவில் விசாரித்த போது எனது மனுவானது உதவி பொறியாளரின் பரிந்துரைக்காக சென்றுள்ளதாக தெரிந்துகொண்டேன். அன்றே நான் உதவி பொறியாளர் திரு.செந்தில்குமார் அவர்களை அவரது அலுவலகத்தில் சென்று சந்தித்தேன். மேற்படி எனது மனுசம்மந்தமாக அவரிடம் கேட்ட போது என்னை பற்றி விசாரித்துவிட்டு மறுநாள் காலையில் தன்னை தொலைபேசியில் அழைக்கும்படி அவரது தொலைபேசி எண்.9750475040 ஐ என்னிடம் கொடுத்தார். நான் அதனை குறித்து கொண்டு அங்கிருந்து கிளம்பிவிட்டேன். பின்னர் மறுநாள் காலையில் சுமார் 7 மணியளவில் நான் அவருக்கு எனது தொலைபேசி எண்.9994853717 லிருந்து அவரது தொலைபேசி எண்ணான 9750475040 க்கு அழைத்தேன். அவர் அப்போது உடுமலை ரோட்டில் உள்ள தொழிற்பேட்டை ஆர்ச் பக்கத்தில உள்ள தேனீர்கடைக்கு வரச்சொன்னார். இதன்பேரில் நான் அங்கு சென்றேன். அப்போது அவர் அங்கிருந்தார். பின்னர் எனது மனு சம்மந்தமாக அவரிடம் கேட்டபோது அவர் எனக்கு தடையில்லா சான்று பெறுவதற்கு, அனைத்து வேலைகளையும் முடித்து தர அவருக்கு தனியாக பணம் ரூ.4,00,000/– கேட்டார். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அதனால் நான் எனது அம்மாவிடம் கேட்டு சொல்வதாக கூறிவிட்டு வந்துவிட்டேன். நான் மீண்டும் கடந்த 15.06.2022 ஆம் தேதி எனது மனு சம்மந்தமாக திரு.செந்தில்குமார் அவர்களுக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினேன். அப்போது அவர் வெளியூர் சென்றுள்ளதாகவும், நேரில் மறுநாள் வரும்படி கூறினார். நான் 17.06.2022 ஆம் தேதி அவரது அலுவலகத்திற்கு மதியம் சுமார் 2 மணிக்கு சென்று அவரை நேரில் சந்தித்து மனு சம்மந்தமாக அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் என் வேலையை மட்டும் முடித்து கொடுக்கிறேன், மேற்படி நீங்களே பார்த்து கொள்ளுங்கள் என்று கூறி அதற்காக மட்டும் பணம் ரூ.50,000/– அவருக்கு தருமாறு கேட்டார். அதனால் நான் எனது அம்மாவிடம் பேசிவிட்டு சொல்வதாக அவரிடம் கூறிவிட்டு வந்துவிட்டேன். கடந்த 21.07.2022 ஆம் தேதி மாலை சுமார் 5 மணிக்கு நான் உதவி பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று உதவி பொறியாளர் திரு.செந்தில்குமார் அவர்களை சந்தித்து எனது கோப்புகளை பரிந்துரை செய்து அனுப்பிவிட்டீர்களா என்று கேட்டேன். அவர் இன்னும் அனுப்பவில்லை என்றும், தான் கேட்ட பணத்தை ரெடி செய்து விட்டீர்களா என்று கேட்டார். அதற்கு நான் எனது அம்மா தாங்கள் கேட்ட

பணம் அதிமாக இருப்பதால் இன்னும் கொஞ்சம் குறைத்து கொள்ளும்படி கேட்கசொன்னார். அதற்கு உதவி பொறியாளர் சரி பணம் ரூ.30,000/– கொடுங்கள் என்றும் உங்கள் கோப்புகளை தயார் செய்ய ரூ.20/– க்கான ஸ்டாம்ப் பேப்பர் வாங்கி தரும்படியும், பணத்தை ரெடி செய்துவிட்டு என்னை கூப்பிடுங்கள் என்று கூறினார். இன்று 26.07.2022 காலை நான் அவரது தொலைபேசி எண்ணிற்கு அழைத்து இன்று வருவதாக கூறினேன். அவரும் தான் அலுவலகத்தில் தான் இருப்பேன், வரும்போது தான் கேட்ட பணத்தை கொண்டுவாருங்கள் என்று கூறினார். நான் யோசனை செய்து பார்த்ததில் என்னுடைய கோப்புகளை உதவி பொறியாளர் பரிந்துரை செய்து அனுப்ப ரொம்ப காலதாமதம் எடுத்தும், லஞ்சமாக பணம் ரூ.30,000/– கொடுத்தால் தான் என்னுடைய கோப்பை தயார் செய்து அனுப்புவதாக சொன்னதால் எனக்கு அவர் கேட்ட பணம் ரூ.30,000/– ஐ கொடுத்து எனது வேலையை முடிக்க விருப்பம் இல்லை. எனவே தற்போது லஞ்சமாக பணம் ரூ.30,000/– கேட்கும் கோவை பொள்ளாச்சி தாலுகா, ஆழியார் வடிநிலகோட்டம், நீர்வள ஆதாரத்துறை உதவி பொறியாளர் திரு.செந்தில் குமார் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் x/x/x/x/ (S.வேங்கை செல்வபிரபு, 26/7/2022) இடம் – கோவை, நாள் – **26.07.2022.** மேற்படி புகார் சம்மந்தமாக ரகசிய விசாரணை மேற்கொண்டதில் இருந்தும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் புகார்தாரரின் புகாரின் உண்மைதன்மை உறுதி செய்யப்பட்டு, எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று **26.07.2022** ம் தேதி காலை **11.30** மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2022/AC/CB u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 ன்படி மேற்படி எதிரி திரு.செந்தில்குமார், உதவி பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, ஆழியார் வடிநிலகோட்டம், பொள்ளாச்சி தாலுகா, கோவை என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். Respected Sir, Received the complaint on 26.7.2022 at 1100 hrs Sd/- x-x-x-x 26.7.2022 (C.LATHA), Inspector of Police, V&AC, Coimbatore. Respected Sir, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.10/2022/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as

amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 26.07.2022 at 11.30 hrs. Sd/- x-x-x-x 26/7/2022 (C.LATHA), Inspector of Police, V&AC Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார்மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(C.லதா)
காவல்ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.